# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 16 ஹிஜ்ரி 1432 ஷவ்வால் செப்டம்பர் 2011

இலவசம்


# பொன்னான புனித நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்



# ஒருங்கிணைந்து உயர்வு பெறுவோம்!

## இந்திய முஸ்லிம் பேரவை இஃப்தார் நிகழ்ச்சியில் உறுதி

இந்திய முஸ்லிம் பேரவை-FIM-இஃப்தார்-நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை 6.8.2011 மாலை 6.30 மணி முதல் பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மஸ்ஜித்தின் பன்னோக்கு அரங்கில் நடத்தியது.

மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர்.நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தகவல்,தொடர்பு, கலைகள் அமைச்சரும், இஸ்லாமிய விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், முன்னைய அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் தலைவர் அலாமி மூஸா, பல சமூக அமைப்புகளின் தலைவர்கள், இந்திய, இலங்கைத் தூதர்கள் முதலானோர் வருகையளித்தனர்.

அதிபர் நாதன் அவர்களுக்கு பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் ஹாஜி எஸ்.எம்.ஜலீல் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார். இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி டாக்டர் கே.எம்.தீன் அதிபருக்கு மாலை அணிவித்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக தேசியப் பற்றுறுதி இடம் பெற்றது. பேரவையின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். "16 அமைப்புகள் அங்கம் வகிக்கும் இந்திய முஸ்லிம் பேரவை ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறது. அதிபர் எஸ்.ஆர்.நாதன் அவர்களும் இதற்கு ஒரு காரணம். எட்டு ஆண்டுகளுக்கு முன், அவர்கள் கூறிய செய்தி மனதில் பதிந்து விட்டது. எல்லா இந்திய அமைப்புகளும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். ஒன்றுபட்டு இயங்க வேண்டும், உதவ வேண்டும், ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம் என்பதுதான் நோன்பின் தத்துவம்.

"நபிகளார் வாழ்ந்த வாழ்க்கையும் அவர்களின் வழிமுறைகளையுமே நாம் ஏற்று நடக்கிறோம். அதிபர் நாதன் அவர்கள் ஆற்றிக்கொண்டிருக்கும் நீண்ட காலச் சேவையை மதித்துச் சிறப்பிக்க நமது நிகழ்ச்சிகளுக்கு அழைக்க வேண்டும் என்பது வெகுநாள் அவா. நமது அழைப்பை ஏற்று இஃப்தார் நிகழ்ச்சிக்கு அவர்கள் வருகையளித்திருப்பது சிறப்புக்குரியது" என்றார் ஹாஜி கே.எம்.தீன்.




சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக பன்னோக்கு நிதி ஒன்றை அரசாங்க அனுமதியோடு தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை பேரவையின் சார்பில் முன்வைப்பதாக அவர் தெரிவித்தார். மக்களுக்கும், மாணவர்களின் எதிர்கால நலனுக்கும், அத்தகைய நிதி பெரிதும் உதவும் என்றும் கூறினார். அதற்கான கோரிக்கை மடலை அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிமிடம் டாக்டர் தீன் ஒப்படைத்தார்.

பேரவையின் சார்பில் ஹாஜி ஜைனுல் ஆபிதீன் ரஷீத் ஆங்கிலத்தில் வரவேற்பு உரையாற்றினார். "தமிழ் தெரியும் உங்க எல்லாரையும் பார்க்க ரொம்ப சந்தோஷம்" என்று கூறி அனைவரையும் மகிழ்வித்தபடி ஆங்கில உரையை அவர் தொடர்ந்தார். "இது மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சி. தென் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து முன்னாளில் சிங்கப்பூரில் குடியேறிய முஸ்லிம்கள் மிகப் பெரும் சாதனைகளைப் படைத்திருக்கின்றனர். ஜாமியா முதலான அமைப்புகளின் மார்க்க, கல்விப் பணிகளை நாம் அறிவோம். ஹாஜி எஸ்.எம்.ஜலீல் போன்ற புரவலவர்கள் நற்பணிகளை இன்றும் தொடர்கின்றனர். அனைவருக்கும் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவையின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார் அவர்.

சிறப்பு விருந்தினர் அதிபர் எஸ்.ஆர்.நாதன் தமிழிலும், ஆங்கிலத்திலும் உரையாற்றி ஆக்ககரமான பல யோசனைகளை வழங்கினார். பென்கூலன் பள்ளிவாசலுடன் தாம் கொண்டிருந்த தொடர்பையும் விவரித்தார்.

"இன்றைக்கு முப்பது வருஷத்துக்கு முன் தரைப் பள்ளிவாசலாக இருந்த பென்கூலன் பள்ளிவாசலுக்கு வாரம் ஒரு நாள் வருவேன். என் நண்பர் சையிதப்பா இங்கே தங்கியிருந்தார். அவரைப் பார்க்கவே வருவேன். அதற்குப் பிறகு நான் இங்கு வர வாய்ப்பு இல்லை. புதிய பென்கூலன் பள்ளிவாசலைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். இவ்வளவு சிறப்பான இடத்தைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்!" என்று வியந்தார்.

"இந்திய முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும் என்று 12 வருஷத்தில் பல முறை பிரயாசைப்பட்டிருக்கிறேன். ஒன்று சேர்ந்து விழா நடத்தினால் வருவேன் என்றும் கூறி வந்தேன். இந்த விழாவைப் பார்த்து சந்தோஷமடைகிறேன். வருங்காலத்திலும் நீங்கள் முன்னேற்றத்துக்கு வழிகாட்ட வேண்டும்" என்றார் அதிபர்.

ஆங்கில உரையிலும் இக்கருத்தை அவர் வலியுறுத்தினார். பல ஊர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் முஸ்லிம்களிடையே வித்தியாசம் இருக்கக்கூடாது. தமிழ் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக இயங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் உஸ்தாத் ஷாஹுல் ஹமீத் அவர்களின் துஆவைத் தொடர்ந்து, வெகுசிறப்பாக இஃப்தார் நடைபெற்றது.

# முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜாமியா சிங்கப்பூரின் பாராட்டு உபசரிப்பு




ஜாமியா சிங்கப்பூர், முன்னைய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் நற்பணிக்கு நன்றி பாராட்டிச் சிறப்பிக்க கடந்த 2.7.2011 அன்று தேநீர் உபசரிப்பு நடத்தியது.

திரு.அப்துல்லா தர்மூஜி (நாடாளுமன்ற நாயகர்), திரு.ஜார்ஜ் இயோ (முன்னாள் வெளியுறவு அமைச்சர்), திருமதி லிம் ஹ்வி ஹுவா (முன்னாள் இரண்டாம் நிதி மற்றும் போக்குவரத்து அமைச்சர்), திரு.ஜைனுல் ஆபிதீன் ரஷீத் (முன்னாள் மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர்) மற்றும் அவருடைய துணைவியார், இணைப் பேராசிரியர் ஹோ பெங் கீ (முன்னைய மூத்த சட்ட, உள்துறை துணை அமைச்சர்), திருமதி யூ-ஃபூ ஈ ஷுன் (முன்னாள் சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை துணை அமைச்சர்), டாக்டர் அஹ்மது முஹம்மது மகாட் (முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்), திருவாட்டி சிந்தியா புவா (அல்ஜுனைட் நகர மன்ற முன்னாள் தலைவர்) ஆகியோர் சிங்கப்பூருக்கு ஆற்றிய பன்முனைப் பொதுச் சேவைகளுக்காக இந்நிகழ்ச்சியில் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டனர்.

இந்த உபசரிப்பு நிகழ்ச்சியில் ஜாமியா சிங்கப்பூருடன் சிங்கப்பூர் புத்திஸ்ட் லாட்ஜ் அமைப்பும் இணைந்து பங்காற்றியது. சிறப்பிக்கப்பட்ட தலைவர்கள் பலரும் இரு அமைப்புகளும் நடத்திய பல சமூக சேவை மற்றும் நலனபிவிருத்தி நிகழ்ச்சிகளில் அவ்வப்போது கலந்து கொண்டதை ஜாமியா நினைவு கூர்ந்தது.

தகவல், தொடர்பு, கலைகள் அமைச்சரும், முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அவர்களும், பல்வேறு தொண்டூழிய நிறுவனங்கள் மற்றும் சமய அமைப்புகளைச் சேர்ந்த 200 விருந்தினர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஜாமியாவின் தலைவர் ஹாஜி அப்துல் கரீம் மைதீனும், சிங்கப்பூர் புத்திஸ்ட் லாட்ஜ் அமைப்பின் தலைவர் திரு.லீ போக் குவானும் உரையாற்றினர்.

திரு.அப்துல்லா தர்மூஜியும், திரு. ஜார்ஜ் இயோவும் உபசரிப்புக்கு நன்றி பாராட்டிப் பேசினர்.

# இனிய ரமலான் மாதத்தில் புனிதக் கடமைகளை நிறைவேற்றுவோம்

## முஃப்தி டாக்டர் ஃபத்ரிஸ் பகரம் செய்தி

எல்லாம் வல்ல அல்லாஹ் புனித ரமலான் நோன்பு நோற்கும் நல்லருளை நமக்கு வழங்கியிருக்கிறான். அவனுடைய நல்லாசியை ஏற்று புனித நோன்பிருந்து அருட்கொடைகளைப் பெறுவோம்.

புனித ரமலான் மாதம் சக முஸ்லிம்களுடன் உறவுகளை, பிணைப்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்புகளை, ஊக்குவிப்புகளை நமக்கு வழங்குகிறது. நோன்பிருப்பதும், ஜகாத் தானம் வழங்குவதும் ஏக இறைவனுக்குப் பணிந்து நாம் நற்செயல் புரிவதை தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றன. மேலும் பல நற்பணிகளைத் தொடரவும் நம்மை வழிநடத்துகின்றன. நோன்பு நோற்பதன் மூலம், வசதி குறைந்தவர்களின் சிரமங்களை நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் பெறுகிறோம். ஜகாத் கடமையை நிறைவேற்றுவதால் இறைவன் வழங்கிய செல்வத்தை வசதியற்றவர்களுக்கு பகிர்ந்தளித்து அணுக்கமான சமூகப் பிணைப்பை ஏற்படுத்தலாம்.

இதனை இறைவன் திருக்குர்ஆன் அத்-தௌபா அத்தியாய வசனத்தில் எடுத்துரைக்கிறான்: “அவர்கள், (தங்கள் நிராகரிப்பிலிருந்து விலகி) பச்சாதாபப்பட்டு தொழுகையைக் கடைப்பிடித்து, ஜகாத்தும் கொடுத்து வந்தால் அவர்கள் உங்கள் மார்க்க சகோதரர்களே, அறிவுள்ள மக்களுக்கு நாம் நம்முடைய வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம்.”



இறையருளால், ஜகாத் கடமைக்கு நாம் அனைவரும வலுவான ஆதரவு வழங்க வேண்டும். முயிஸ் நிர்வாகத்திலுள்ள ஜகாத் வசூல் முறைக்கு அண்மைய ஆண்டுகளில் ஆதரவு அதிகரித்து வருகிறது. அதில் பங்கேற்பதன் மூலம் உதவி தேவைப்படும் தனிநபர்களுக்கும், குடும்பங்களுக்கும் நாம் உதவ வேண்டும். அதனால் ஒருவருக்கொருவர் உதவவும், பராமரிக்கவும் இயலும். நமது ஆன்மிக இணைப்புக்கும் பிணைப்புக்கும் அது உதவும். ஜகாத் உதவி பெறுவோர் சுயசார்பும், சுய முன்னேற்றமும் பெறுவர் என்ற நம்பிக்கையுடன் உதவிக்கரம் நீட்டுவது அவசியம்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் சுன்னத் நெறிமுறைக்கேற்ப ஜகாத் வழங்கி நமது சமூக, சமய மேம்பாட்டுக்கு நாம் பங்காற்ற வேண்டும்.

இனிய, புனித ரமலான் மாதத்தில் நம் அனைவருக்கும் எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக. அனைவருக்கும் நல்வாழ்த்துகள்.

# முன்னாள் தலைமை முஃப்திக்கு மதிப்புக்குரிய சேவை விருது

முன்னைய தலைமை முஃப்தி ஷேக் சையது ஈசா முஹம்மது சமைத் அவர்களுக்கு சிங்கப்பூர் குடியரசின் மதிப்புக்குரிய சேவை விருது வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு தேசிய தினத்தை முன்னிட்டு இவருக்கு இவ்விருது அளிக்கப்பட்டது.

ஷேக் சையது ஈசா, வயது 72, அவர்கள் சிங்கப்பூரின் தலைமை முஃப்தியாக 38 ஆண்டுகாலம் அரும்பணியாற்றிட்டு 2010 டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றார்கள். உறுப்பு தானம், மத்திய சேமநிதி இருப்பு போன்ற முக்கிய விவகாரங்களில் அவர்கள் பரிந்துரைத்த ஃபத்வா, மார்க்க சட்ட விதிமுறைகள், பள்ளிவாசல் கட்டுமானப் பணி தொடர்பான ஆலோசனைகள் பயன்மிக்கவை.

சிங்கப்பூரின் முஃப்தியாக 1972ல் பதவியேற்ற ஷேக் சையது ஈசா, சர்வ சமய அமைப்பின் ஆட்சி மன்ற உறுப்பினர், அதிபரின் சமய நல்லிணக்க மன்ற உறுப்பினர் பொறுப்புகளையும் வகித்து வந்தார்.



விருதுகள் இவருக்குப் புதியவை அல்ல. தமது பன்முனைப் பணிகளுக்கு அங்கீகாரமாக, 1982ல் அரசாங்க பொது நிர்வாக வெண்கலப் பதக்கத்தையும், 2009ல் அதன் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். முயிஸ் 2011ல் இவர் பெயரில் கல்வியாளர் விருது நிதியைத் தொடங்கியது.

தலைமை முஃப்தி பதவியிலிருந்து இவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு டிசம்பரில் முஹம்மது ஃபத்ரிஸ் பக்ரம் அப்பதவியை ஏற்றார்.

ஷேக் சையது ஈசா முஹம்மது சமைத் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளுக்கு சிங்கப்பூர் மலாய் முஸ்லிம் சமூகம் என்றென்றும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது என்று முயிஸ் கூறியது.

# முயிஸ் நற்சேவை விருதுகள்

## உஸ்தாத் இப்ராஹிமும், K.O.ஷேக் அலாவுதீனும் பெற்றனர்

முயிஸ் ஆறு பிரமுகர்களுக்கு இவ்வாண்டுக்கான நற்சேவை விருதுகளை வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. அவர்களில் உஸ்தாத் இப்ராஹிம் முஹம்மது காசிம் அவர்களும், K.O.ஷேக் அலாவுதீன் அவர்களும் இந்திய முஸ்லிம்கள்.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் 23.7.2011 அன்று விருது வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. அதிபர் எஸ்.ஆர்.நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். தகவல் தொடர்பு, கலைகள் அமைச்சரும் முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிமும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை யளித்திருந்தார்.

'ஜாஸா செமர்லாங்' மதிப்பு மிக்க சேவை விருது உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் முஹம்மது காசிம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. 85 வயதினரான அவர், சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்திற்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மார்க்க நற்பணியாற்றி வருகிறார்.

அவருடைய பணிகள் முன்னுதாரண மானவை என அதிபர் நாதன் பாராட்டினார். உஸ்தாத் இப்ராஹிம் அவர்களுக்கு தமிழ், உருது, மலாய், ஆங்கிலம், அரபி மொழிகள் தெரியும். பல்வேறு இன, சமூக மக்களுடன் எளிதாகப் பழகக் கூடியவர் என்று அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் திருமணப் பதிவகத்தில் துணை உறுதிமொழியாளராகவும், சிங்கப்பூர் ஷரியா நீதிமன்றத்தில் நடுநிலை நீதிபதியாகவும் உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் சேவையாற்றி வருகிறார். பல பள்ளிவாசல்களிலும், மலாய்-முஸ்லிம் அமைப்பு களிலும் மார்க்கக் கல்வி போதனை மற்றும் திருக்குர்ஆன் வகுப்புகளையும் அவர் நீண்ட காலமாக நடத்தி வருவதை நமது சமூகம் நன்கறியும். புனித ஹஜ், உம்ரா பயணங்களுக்கு வழிகாட்டி யாகவும் அவர் பணியாற்றி வந்துள்ளார்.

மண வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு இலக்கான தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்குதல், சிறைச்சாலை கைதிகளை நல்வழிப்படுத்த ஆலோசனை வழங்குதல் ஆகிய பணிகளையும் உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் செய்து வருகிறார்.

K.O.ஷேக் அலாவுதீன், 'அனுகெரா ஜாஸா பக்தி' நீண்ட காலச் சேவை விருது பெற்ற ஐவரில் ஒருவர். 62 வயதினரான இவர், முஹம்மது அலி




பள்ளிவாசலின் செயலாளராக 1992 முதல் சேவையாற்றி வருகிறார் பென்கூலன் பள்ளிவாசலின் செயலாளராக 1994-1996ல் இருந்தார்.

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் தலைவராகப் பத்தாண்டு காலம் பொறுப்பு வகித்த ஷேக் அலாவுதீன் பல கல்வி, சமூக, கலாசாரத் திட்டங்களை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

இந்திய முஸ்லிம் பேரவையின் செயலாளராக எட்டு ஆண்டுகளும், துணைத் தலைவராக ஈராண்டு களும் பணியாற்றினார்.

மெண்டாக்கி இயக்குநர் சபை, முயிஸ் நிர்வாகக் குழு, நாகூர் தர்கா நிதி திரட்டும் குழு, சிராங்கூன் கார்டன்ஸ் சமூக மன்ற நிர்வாகக் குழு, மெய் சின் உயர்நிலைப் பள்ளி ஆலோசனைக் குழு ஆகியவற்றில் அங்கம் வகித்த இவர், 'வரித்தா' இதழின் தமிழ்ப் பதிப்பு ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றிருந்தார்.

ICPAS மற்றும் MNCs ஆகியவற்றிலும் அங்கம் வகித்துள்ள K.O.ஷேக் அலாவுதீன் அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார கழகத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

உஸ்தாத் முஹம்மது ஃபவ்ஸி, ஹம்ரி ஹாூனார், புஷாரி கயாத், ஹாூசைனி அப்துல்வா ஆகியோர் அனுகெரா ஜாஸா பக்தி விருதைப் பெற்ற மற்ற நால்வர்.

இந்நிகழ்ச்சியில், அதிபர் சவால் அறநிதிக்கு முயிஸ் திரட்டிய ஒரு லட்சம் வெள்ளி நன்கொடையாக வழங்கப்பட்டது.

# எஸ்.எம். ஜலீல் அறக்கட்டளை தொடங்கியது

சிங்கைச் சீதக்காதியார் எனும் சிறப்பைப் பெற்ற தொழிலதிபர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் பிபிஎம், அறக்கட்டளையை நிறுவி அரிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார்.

தொய்வில்லாமல் சமூக நற்பணிகளில் நாட்டம் செலுத்தி வரும் அவர், எஸ்.எம்.ஜலீல் அறக்கட்டளையை 10.7.2011 அன்று தொடங்கினார். ஒரு மில்லியன் வெள்ளி தொடக்க நிதியைக் கொண்ட அந்த அறக்கட்டளையை அதிபர் எஸ்.ஆர்.நாதன் அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்து பாராட்டுரை வழங்கியது ஓர் அரிய பதிவு.

"திரு.ஜலீல் பல ஆண்டுகளாக வசதி குறைந்தவர்களுக்கு உதவி வருகிறார். இவருடைய உதவிகள் மூலம் பல அமைப்புகள் பயனடைந்துள்ளன. வசதி குறைந்தவர்களுக்கு உதவ இவரைப் போன்று மேலும் பலர் முன்வர வேண்டும்," என்று அதிபர் நாதன் பரிந்துரைத்தார்.

ஜலீல் அவர்களின் முன்னுதாரணமான கொடைப்பணிகளை எல்லா அமைப்புகளுமே பாராட்டி வந்துள்ளன. சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம் 4.10.2008ல் நடத்திய நிகழ்ச்சியில் 'சிங்கைச் சீதக்காதியார்' என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்ததை மறக்க முடியுமா?

சீதக்காதி பதினேழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த வள்ளல். காயல்பட்டினத்தைச் சேர்ந்த வரலாற்று நாயகரான அவர், உமறுப் புலவர் சீறாப்புராணக் காவியத்தை இயற்ற உதவிக்கரம் நீட்டியவர். மக்களின் பசி தீர்க்க அன்னதானம் வழங்கியவர் அவர். தமிழகத்தில் சீதக்காதி அறக்கட்டளை இயங்கி வருவதை அறிவோம்.

"பல்வேறு சிறப்புக்குக் காரணமான சீதக்காதியாரின் செயல்பாட்டோடு நமது சிங்கை நாட்டில் வாழும் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீலின் நடைநெறிமுறைகளை ஒப்பிட்டுப் பார்த்தோம். தமிழ்ச் சமுதாயத்திற்கும், எழுத்தாளர்களுக்கும். கலைஞர் களுக்கும், நூலாசிரியர்களுக்கும் ஒட்டுமொத்த சிங்கப்பூர் மக்களின் நலன்களுக்கும் தமது கொடைத்தன்மையால் அபரிமிதமாக அள்ளிக் கொடுத்து, அரவணைக்கும் அன்பு நெஞ்சம் கொண்ட ஹாஜி அப்துல் ஜலீல் அவர்களுக்கு அனைத்து சிங்கப்பூர் மக்களின் சார்பாக சிங்கைச் சீதக்காதியார் எனும் பட்டத்தை வழங்கி கௌரவிக்கிறோம்." என்று சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம் அப்போது அறிவித்தது.

அதிபர் எஸ்.ஆர்.நாதன் குறிப்பிட்டதைப் போன்று, ஹாஜி ஜலீல் பல ஆண்டுகளாக வசதி குறைந்தவர்களுக்கு உதவி வருகிறார். அவருடைய பன்முனைப் பணிகளின் பட்டியல் விரிவானது. நாகூர் தர்காவை மரபுடைமை நிலையமாக மேம்படுத்தும் பணியில் முக்கிய பங்காற்றினார். அதற்கான நிதி திரட்டும் விருந்தின் போது தமது மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் சார்பில் தனிப்பட்ட முறையில் ஒரு லட்சம் வெள்ளியை வழங்கினார்.



"இந்த அறக்கட்டளையைத் தொடங்குவது தமது நீண்ட நாள் கனவு" என்று மினி என்வைரன்மெண்ட் குழுமத்தின் தலைமை நிர்வாகி ஹாஜி ஜலீல் தெரிவித்தார்.

"கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு அமைப்புகளுக்கு நன்கொடையளித்து வருகிறேன். இதனை ஒருமுகப்படுத்தி முறையாகக் கையாளும் விதத்தில் இந்த அறக்கட்டளையை உருவாக்கியிருக்கிறேன். சுயேச்சை யாகச் செயல்படும் நிர்வாகிகள் இதனை நடத்துவார்கள்" என்றார் அவர்.

இதன் முக்கிய நோக்கங்களையும் ஹாஜி ஜலீல் விளக்கினார். வசதி குறைந்தோர், உடைந்து, நலிந்த குடும்பத்தினர் மற்றும் கல்வி உதவி தேவைப்படுவோருக்கு இயன்ற உதவிகளை தமது அறக்கட்டளை வழங்கும் என்றார்.

முன்னைய மூத்த வெளியுறவுத் துணை அமைச்சரும், எம்.இ.எஸ் குழுமத்தின் தலைவருமான ஜைனுல் ஆபிதீன் ரஷீதும், அறக்கட்டளையின் இயக்குநர் குழுவைச் சேர்ந்தவர்களும் இதனை நிர்வகிப்பார்கள். பல சமூக அமைப்புகளுக்கும், அற நிறுவனங்களுக்கும் நிதி வழங்கப்படும்.

அறக்கட்டளைக்கு ஆண்டு தோறும் தமது வருமானத்திலிருந்து ஒரு மில்லியன் வெள்ளியை நன்கொடையாக வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அல்ஹாஜ் எஸ்.எம்.ஜலீல் தெரிவித்தார்.

எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் தூய்மையாய் இருப்பவரைத் தவிர வேறு யாரும் உண்மையாளர் அல்லர் என்பது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நன்மொழி. நல்லெண்ணம் அழகிய வணக்கமாகும் என்பதும் அவர்களின் நல்லுரை. இந்த நபிமொழிகள் தம்மை வழிநடத்துவதாகக் கூறுகிறார் இந்த சிங்கப்பூர் சீதக்காதி. அதனால் உழைப்பையும் உதவும் பண்பையும் உயிர்நாடியாகக் கொண்டு செயல்படுகிறார் இவர்.

இறைவனின் நல்லருளால் புரவலர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் பிபிஎம். அவர்களின் நற்பணிகள் நாளும்தொடர 'நாடி'யின் நல்வாழ்த்துகள்!

- ஜே.எம்.எஸ்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



National Day Observance Ceremony 2011, 5 Aug 2011



Minister's Distribution of Ramadan Porridge to needy residents at Al-Amin Mosque, 2 Aug 2011




Launch of Touch of Ramadan celebrations 2011/1432H, 30 Jul 2011



Singapore Haj Mission Orientation & Training workshop 2011/1432H, 23 & 24 Jul 2011




4th Rahmatan-Lil-Alamin (Blessings-to-All) Day, 16 Jul 2011



President's Challenge Charity Briyani 2011, 16 Jul 2011




Muslimah Seminar - Townhall meeting, 5 Jul 2011



Session with parents as part of pre-departure for overseas bound students, 2 Jul 2011

# ஒரு துணை வேந்தரின் கதை!

ஒரு துணை வேந்தரின் கதை - சிறுகதையோ, நெடுங்கதையான நாவலோ அல்ல. சொந்த வரலாறு. இந்த வரலாற்றின் சொந்தக்காரர் டாக்டர் சே.சாதிக், சிங்கப்பூருக்குப் புதியவர் அல்லர். அவ்வப்போது தென்கிழக்கு ஆசியா நாடுகளில் உலா வந்த கல்வியாளரான இந்தத் துணை வேந்தரை ஜாமியா சிங்கப்பூர்-இந்தோனேசிய கல்வி நிறுவனங்களின் புரிந்துணர்வு-இணக்கக் குறிப்பு கையெழுத்து நிகழ்ச்சியில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக (Vice Chancellor) 1990களில் பதவி வகித்து சாதனைத் தடம் பதித்த முன்னோடி டாக்டர் சே.சாதிக் அவர்கள். "உங்கள் பிறப்பு வளர்ப்பு பற்றி?" - முதல் கேள்வி. "எங்கள் வீட்டில் வைத்த பெயர் 'சதக்' என்பது. 1934 டிசம்பர் 29ம் நாள் நெல்லை மாவட்டம் பர்கிட் நகரம் என்ற ஊரில் பிறந்தவன். 1965ல் என் பெயரை சாதிக் என்று மாற்றிக்கொண்டேன்."

படிப்பு அனுபவத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்க முடியாது என்கிறார் இவர். பி.இ.பொறியியல் படிப்பு 1955-59 முதல், கனடா சென்று திரும்பி எம்.ஐ.டி.யில் பேராசிரியராகப் பணியாற்றிய 1976 வரையிலான பணிக்காலம் ஒரு கட்டம்.

சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் முதுநிலைப் பேராசிரியராகத் தேர்வு பெற்று, எம்.ஐ.டி.யின் நெறியாளராகி, பின்பு சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரானது அடுத்த கட்டம்.

அதற்குப் பிறகு இன்று வரையிலான அனுபவங்கள் மூன்றாவது கட்டம் என விவரித்தார் டாக்டர் சாதிக்.

கல்லியாளரான இந்த முன்னாள் துணைவேந்தர் கவிஞராகவும், விளையாட்டு வீரராகவும் விளங்கினார். ஒரு கவிதை:

> "கலையில்லாக் கல்வி மட்டும் - அட
> விலைபோமா? வெற்றியுண்டா?
> தலையாய வாழ்வினுக்கே- நல்
> கலையேதான் வேர் என்பேன்!"

கலை என்பது உடற்பயிற்சி, விளையாட்டுக்கும் பொருந்தும் என்று கூறும் இவர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட




அனுபவம் விரிவானது. எனக்குப் பிடித்த என் கவிதைகள் எனும் தலைப்பில் பல சுவையான கவிதைகளைப் பட்டியலிட்டிருக்கிறார் டாக்டர் சாதிக்.

சின்னஞ்சிறு வயதில் எனும் கவிதைத் தொகுப்பையும், எழு,சிந்தி, நட, கட்டுரை நூலையும் எழுதியுள்ள இந்த முன்னாள் துணைவேநதர், சுய வரலாற்றின் முதல் பாகமாக 'ஒரு துணை வேந்தரின் கதை' முதல் பாகத்தை வெளியிட்டிருக்கிறார். பக்கங்கள் 408. அடுத்த இரண்டு பாகங்களை எழுதி வெளியிடுவது இவருடைய இலக்கு.

### முதல் பாகத்தைப் பற்றி?

"இந்த முதல் பகுதி பல தரப்பபட்ட சின்னச் சின்னச் செய்திகளை மல்லிகைப் பூக்களைக் கட்டி மணமகனை அலங்கரிக்கும் முகம்மதியப் பழக்கப்படி அமைந்து மணம் வீசுகின்றது. மல்லிகை மணத்திற்கு மயங்காத மனிதர் உண்டோ? எதையும் சொல்லும் வகையிலே சுவையை அள்ளித் தரும் கலைகற்ற துணை வேந்தர், பேச்சுத் தமிழினை வெல்லும் வகையினில் விரவித் தெளித்திருக்கிறார். அந்த மழையினில் நனைந்து இன்புறுவது சுகமாக, நலமாக, இதமாக இருக்கின்றது என்றால் அது மிகையல்ல." - நீதியரசர் டி.என்.வள்ளிநாயகத்தின் ஏழு பக்க சிறப்புரையின் ஒரு பத்தி இது.

டாக்டர் சாதிக்கின் கல்விப் பணியும் சமூக நலச் சேவைகளும் தொடர்கின்றன. பட்டதாரிகளான அவருடைய புதல்வரும் மருமகளும் சிங்கப்பூர் குடியரசில் வாழ்கின்றனர். - சாலி.

# காயல்பட்டினத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு

தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க காயல்பட்டினத்தில் கடந்த ஜூலை 8, 9, 10 ஆகிய தினங்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய பதினைந்தாவது மாநாடு நடைபெற்றது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் மயிலாடுதுறை வட்டாரத்தில் வழக்கறிஞரும், சமுதாய ஆர்வலருமான நீடூர் ஏ.எம்.சயீத் முதலானோர் தொடங்கிய இந்த அமைப்பு தொய்வின்றி மாநாடுகளை நடத்தி வருகிறது.

பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர் உள்ளிட்ட அந்த அமைப்பின் பொறுப்பாளர்களான காயல்பட்டினப் புரவலர்களின் நல்லாதரவுடன் மூன்று நாள் மாநாட்டை நடத்தினர். முந்நூற்றுக்கு மேற்பட்ட இந்திய, தமிழகப் பேராளர்களும், நூற்றுக்கு மேற்பட்ட இலங்கைப் பேராளர்களும், மலேசியா சிங்கப்பூரிலிருந்து மூவரும் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ஆய்வரங்கு களுடன், கவியரங்கம், இசையரங்கம், பட்டிமன்றம் ஆகியவையும் நடைபெற்றன. மாநாட்டை முன்னிட்டு பாரம்பரிய பொருட்கள், ஆவணங்கள், அரிய புகைப்படங்கள் கொண்ட கண்காட்சியும் இடம் பெற்றது.

மாநாட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. காயல்பட்டினத்தின் வரலாற்று ஆவணமாக இது உருவாக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூலான 'ஆய்வு மாலை'யும், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்களின் முகவரி, குறிப்புகள் அடங்கிய 'இலக்கிய இணையம்' நூலும் வெளியிடப்பட்டு



பேராளர்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

சிங்கப்பூர் பேராளர் ஹாஜி எம்.இலியாஸ் ஆய்வு மாலையில், 'சிங்கப்பூரின் நல்லிணக்க நாயகர் ஹாஜி எம்.கே.ஏ.ஜப்பார்' எனும் கட்டுரையை எழுதியுள்ளார். வாழ்க்கைச் சுருக்கம், தமிழ் இலக்கிய ஆர்வலர், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம், பலஇன ஒற்றுமை, சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் திருக்குறள், நினைத்ததை முடிப்பவர், சாதனையாளர், ஆகிய துணைத் தலைப்புகளில் எம்.கே.ஏ.ஜப்பார் அவர்களின் நற்பணிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர், முனைவர் ஹ.மு.நத்தர்சா, முனைவர் மு.இ.அகமது மரைக்காயர் ஆகியோர் ஆய்வு மாலையின் தொகுப்பாசிரியர்கள்.

மாநாட்டில் பங்கேற்ற பேராளர்களில் சிலருக்கு 'சேவைச் செம்மல்' விருது வழங்கப்பட்டது. சிங்கப்பூரைச் சிறப்பிக்கும் வகையில் எம்.இலியாஸ் அவர்களுக்கு அந்த விருதை வழங்கினார், இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் பொதுச் செயலாளரும், தமிழ் மாநிலத் தலைவருமான பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்.

---

## முயிஸ் இணையத்தளத்தில் தமிழ் பக்கங்கள்

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்ற-முயிஸ் இணையத் தளத்தில் முக்கிய அங்கங்களில் ஒன்றாக, தமிழ் மொழிப் பகுதியும் இடம் பெற்றுள்ளது. சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பள்ளிவாசல்கள், இந்திய முஸ்லிம் பேரவை, கடையநல்லூர் முஸ்லிம் லீக், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் போன்ற சமூக நல அமைப்புகள் தங்கள் நிகழ்ச்சிகளையும், பல்வேறு நற்பணித் திட்டங்களையும் பரவலாக எடுத்துரைக்க இந்த தமிழ் இணையப் பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வெள்ளிக்கிழமை தொழுகை உரை ஆகியவற்றை தேவைக்கு ஏற்ப இதிலிருந்து பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம். இந்த வசதியை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளது.

மேல் விவரம் பெற www.muis.gov.sg இணையத் தளத்திற்குச் செல்லுங்கள்.



# கடையநல்லூர் முஸ்லிம் லீக் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா விருந்து
## இந்திய முஸ்லிம்களின் முன்னோடிப் பணிக்கு துணைப்பிரதமர் பாராட்டு

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் பல நிகழ்ச்சிகள் மூலம் அதன் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி வருகிறது.

கடந்த 28.5.2011 அன்று மாலை மிக நீளமான சேலையை உருவாக்கி இச்சங்கம் சாதனை படைத்ததை அறிவோம். குயின்ஸ்டவுன் விளையாட்டரங்கில் 1766 மீட்டர் வண்ணச் சேலைக் காட்சி நடைபெற்றது.

அடுத்த நிகழ்ச்சியாக 2.7.2011 மாலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை ஈசூன் ஆர்க்கிட் கன்ட்ரி கிளப் வளாகத்தில் மாபெரும் விருந்து நிகழ்ச்சியை சங்கம் நடத்தியது. சிங்கப்பூரின் அனைத்து சமூகத் தலைவர்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் இந்த விருந்தில் பங்கேற்றனர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நஸீர் கனியும், பொதுச் செயலாளர் ஹாஜி மு.அ.மசூது அவர்களும் தொடக்கவுரை, வரவேற்புரைகளை வழங்கினர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட துணைப் பிரதமரும், நிதி, மனிதவள அமைச்சருமான தர்மன் சண்முகரத்னம், தமிழிலும், ஆங்கிலத்திலும் உரையாற்றி விழாவைச் சிறப்பித்தார். இந்திய முஸ்லிம் முன்னோர்கள் பற்பல நற்பணிகள், நடவடிக்கைகள் மூலம் சிங்கப்பூர் சமூகத்தை ஒருங்கிணைத்துள்ளனர் என்று மனந்திறந்து பாராட்டினார் அவர்.

இந்தியா மற்றும் பினாங்கு முதலான மலேசிய மாநிலங்களிலிருந்து இந்திய முஸ்லிம் முன்னோடிகள் சிங்கப்பூருக்கு வந்தனர். சமுதாய ஒருங்கிணைப்புக்கு வழிவகுக்கும் பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர். பள்ளிவாசல்களைக் கட்டினர். பள்ளிக்கூடங்களை நிறுவினர். பல சாதனைகளைப் படைத்தனர் என்று, திரு.தர்மன் சண்முகரத்னம் குறிப்பிட்டார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஆற்றி வரும் நற்பணிகளை அவர் பாராட்டினார். வசதி குறைந்தவர்களுக்கும், உடற்குறையுள்ளவர்களுக்கும் அதிக உதவி தேவைப்படுவதால், அவர்களின் தேவைகளுக்கு உதவி, ஒத்துழைப்பு வழங்குவதில் சங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அதிகமான இளையர்களை தனது




நற்பணிகளிலும், செயல் திட்டங்களிலும் கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஈடுபடுத்தி வருவது பாராட்டுக்குரியது. இந்த அணுகுமுறை எதிர்காலத் தலைமைத்துவ மாற்றத்திற்கு பெரிதும் உதவும் என்று அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் கூறினார்.

### விருதுகள்

கடையநல்லூர் முஸ்லிம் லீக், இவ்விழாவில் பல பிரமுகர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தது. முன்னாள் வெளியுறவு மூத்த துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் அவர்களுக்கு 'காயிதெ மில்லத் விருது' வழங்கப்பட்டது.

எம்.இ.எஸ். குழுமத்தின் தலைவர் ஹாஜி அப்துல் ஜலீல், மாடர்ன் மாண்டிசோரி இண்டர் நேஷனல் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி டாக்டர் டி.சந்துரு மக்கள் கழக நற்பணிப் பேரவையின் தலைவர் ப.திருநாவுக்கரசு ஆகியோருக்கு உமறுப் புலவர் உன்னத சமூக சேவை விருதுகள் வழங்கப்பட்டன. சங்கத்தின் சார்பில் சிறப்பு விருந்தினர் தர்மன் சண்முகரத்னம் அவற்றை வழங்கினார்.

மேலும் சில சமூக அமைப்புகளின் தலைவர்களுக்கு அ.நா.மெய்தீன் பெயரில் பாராட்டுக்குரிய சமூக சேவை விருதுகள் வழங்கப்பட்டன. ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால், தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு.ஹரி கிருஷ்ணன் முதலானோர் விருதுகளைப் பெற்றனர். உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்த அ.நா.மெய்தீன் அவர்களை அனைவரும் நினைவுகூரும் இனிய நிகழ்ச்சியாக இது அமைந்தது.




**புதிய சின்னம்**

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் புதிய சின்னம் இவ்விழாவில் அறிமுகம் செய்யப்பட்டது. துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம், புதிய தொழில்நுட்ப காலத்திற்கேற்ப ஐ-பேட் சாதனத்தின் மூலம் சங்கத்தின் புதிய சின்னத்தை வெளியிட்டார்.

சிறப்பான இந்த விருந்து விழாவின் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ராஜா முஹம்மது, சங்கத்தின் இணையத் தளத்தைத் தொடங்கி வைத்தார். கடையநல்லூர் முஸ்லிம் லீக் உறுப்பினர்களும், மற்றவர்களும் இதனால் எவ்வாறு பயனடையலாம் என்பதை அவர் விளக்கினார்.

இந்த விருந்து விழா நிகழ்ச்சியை ஒலி 96.8 வானொலிப் படைப்பாளர் ரஃபியும், தொலைக்காட்சிப் படைப்பாளர் வடிவழகனும் நெறிப்படுத்தி அனைவரையும் மகிழ்வித்தனர்.

கலை நிகழ்ச்சி, மலர் வெளியீடு, அன்பளிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து அறுசுவை விருந்துடன் விழா நிறைவு பெற்றது.

---

**ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின், நோன்பு திறக்கும் விருந்து உபசரிப்பு, 13-8-2011 அன்று, பென்கூலன் பள்ளிவாசல் மூன்றாம் தளத்தில் நடைபெற்றது.**



# உடல்நலப் பரிசோதனை, புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார சங்கமும் மலபார் பள்ளிவாசலும் இணைந்து உடல்நலப் பரிசோதனை மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின.

விக்டோரியா ஸ்திரீட் மலபார் பள்ளிவாசல் வளாகத்தில் 24.7.2011 காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணிவரை இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்பதிவு செய்து கொண்ட மூத்த குடிமக்களுக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் முறையான உடல்நலப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. 115 பேர் இதில் கலந்து கொண்டனர்.

சிறுநீர் பரிசோதனை, இரத்த சர்க்கரை அளவு, இரத்த அழுத்தச் சோதனை ஆகியவை செய்யப்பட்டன. உடல் நல ஆரோக்கியம், பராமரிப்பு குறித்த ஆலோசனைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவற்றுடன், அதிகரித்துவரும் புற்றுநோய் மற்றும் இதர நோய்கள் பற்றிய உரை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இந்தச் சோதனைகள் பயன்மிக்கவை என்று பங்கேற்றவர்கள் மனநிறைவு தெரிவித்தனர்.

பொதுமக்களின் நலனைக் கருதி இத்தகைய உடல் நலப் பரிசோதனை, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அவ்வப்போது இணைந்து நடத்த அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார சங்கம் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் K.O.ஷேக் அலாவுதீன் தெரிவித்தார்.



# ரமலானை வரவேற்போம்
# தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க மதரஸா நிகழ்ச்சி

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் மதரஸா நூருல் இஸ்லாம் புனித நோன்பு மாதத்தை வரவேற்கும் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தியது.

மஸ்ஜித் அர்-ராபிதா பள்ளிவாசல் உள்ளரங்கில் சங்கத்தின் தலைவர் ஹாஜி N.M.ஹசன் குத்தூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் செயலாளர் ஹாஜி பஹ்ருதீன் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து, சங்கத்தின் உஸ்தாத் மவ்லவி ஹாபிஸ் அசன் அலி ஃபைஜி மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். தொடர்ந்து, அப்துல் கபூர் பள்ளிவாசலின் இமாம் மவ்லானா மவ்லவி நஹ்வி மஹ்ளரி சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்ட ஹாஜி பாசில் முஹம்மது அவர்கள், மலேசிய வானொலி நிகழ்ச்சிப் படைப்பாளர் மவ்லானா ஹாஜி ஜமால் அப்துல் ஹமீத் 'ரமலானின் மாண்பு' எனும் தலைப்பில் பேசிய ஆடியோ சீடியை வெளியிட்டார்.




கடையநல்லூர் முஸ்லிம் லீகின் நிர்வாகிகளும், இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி டாக்டர் தீன் மற்றும் சமுதாயப் பிரமுகர்களும், பொதுமக்களும் சீடியைப் பெற்றுக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவாக சங்கத்தின் உஸ்தாத் துஆ ஓதினார். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# இனிய இஃப்தார் நிகழ்ச்சிகள்

கடையநல்லூர் முஸ்லிம் லீக் *9.8.2011* தேசிய தினத்தன்று குவின்ஸ்டவுன் அல் முஜாஹிதீன் பள்ளிவாசலில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தியது.

சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். "ஆண்டு தோறும் இதே பள்ளிவாசலில் இஃப்தார் நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம். தேசிய தினமான இன்று நமது சமூக அமைப்புகளின் தலைவர்கள், பிரமுகர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வருகையளித்துள்ளது சிறப்புக்குரியது" என்றார் அவர். இதற்கு உதவி, ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு சங்கத்தின் சார்பில் ஹாஜி நசீர் கனி நன்றி பாராட்டினார்.

இந்திய முஸ்லிம் பேரவை, ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம், தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், மலபார் முஸ்லிம் ஜமாஅத் மற்றும் பல பள்ளிவாசல் நிர்வாகிகள், ஆலிம்கள் உள்ளிட்டோர் இஃப்தாரில் கலந்து கொண்டனர்.

இலங்கையைச் சேர்ந்த அல்ஹாஜ் அப்துல் ரஹீம் நூரியும், சிங்கப்பூர் முஹம்மது அஸ்மி ஃபைஜியும் துஆ ஓதி சிறப்பித்தனர்.



### அப்துல் கபூர் பள்ளிவாசலில்

அப்துல் கபூர் பள்ளிவாசலில் *11.8.2011* அன்று நடைபெற்ற இஃப்தாரில் தலைமை முஃப்தி முஹம்மது ஃபத்ரிஸ் பக்ரம், முன்னாள் முஃப்தி ஷேக் சையது ஈசா முஹம்மது சமைத், முயிஸ் பிரமுகர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். தேசிய தின சிறப்பு விருது பெற்ற ஷேக் சையது ஈசா அவர்களுக்கு பாராட்டு நல்கியது.

மலபார் முஸ்லிம் ஜமாஅத், *18.8.2011* அன்றும்; ஜாமியா சூலியா, உய்மா, *20.8.2011* அன்றும் இஃப்தார் நிகழ்ச்சியை நடத்தின.